## ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி திருமஞ்சன ஸ்நபந காலத்தில்

## அருளப்பாடு கட்டியம்

நாயந்தே நாயந்தே—

அக்ரேக்ருத்வா கமபி சரணம் ஜாநுநைகேந திஷ்டந்
பச்சாத் பார்த்தம் விவலநஜுஷா சக்ஷுஷா ப்ரேக்ஷமாண: ।

ஸவ்யே தோத்ரம் கரஸரஸிஜே தக்ஷிணே ஜ்ஞாநமுத்ராம்
ஆபிப்ராணோ ரதமதிவஸந் பாது நஸ் ஸூதவேஷ:

ஏஷநாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந: ।
நாகபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம்புரீம்

தாஸாமர்விரபூத் சௌரி: ஸ்மயமாந முகாம்புஜ: ।
பீதாம்பரதர: ஸ்ரக்வீ ஸாக்ஷாத் மந்மத மந்மத: ॥

1. ஆழ்வார்கள் மடலெடுக்கும் அழகுடைய பெருமாள்;
2. ஆய்ச்சியரைப் பணிகொண்ட மணவாளப் பெருமாள்;
3. ஆழ்ந்தாரைக் கரையேற்ற அவதரித்த பெருமான்;
4. ஆனைக்கன்றருளியிந்த அருளாளப் பெருமாள்;
5. ஆழிகொண்டன்றிரவி மறைத்து அருள்செய்த பெருமாள்;
6. ஆனைமறித்தழகாலே வெல்ல வல்ல பெருமாள்;
7. ஆழ் கடலைக் கடைந்தமரர்க் கமுதூட்டும் பெருமாள்;
8. ஆழ்வார்க்குப் பின்னெறியை அளித்துகந்த பெருமாள்;
9. நந்தெய்வ சிகாமணிப் பெருமாள்.

1. திருவுக்கும் திருவாகிய வானவரசான தேவர் அடையார்தங் கொம்பினுக்கு விடை கொண்டு நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தராய், நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர் மார்பனைப் பின்னானார் வணங்க வந்து, திருமடந்தை மண்மடந்தை இருபாலுந்திகழச் சிங்காதனத்தின் மேல் தண்டாமரை சுமக்கச் செங்கமலக் கழலும் சிற்றிதழ்போல் விரலுமாய் அடிச்சோதி நீ நின்ற தாமரையாயலர்ந்ததுவோ என்னும்படி நிலையார நின்றவழகும்,

2 கறையினார் துவருடுக்கைக் கடையாவின் கழிகோற்கைச் சறையினாராய் பசுநிரை மேய்ப்புகந்து கன்று மேய்த்தினிதுகந்த வாத்ஸல்யம் விளங்கும்படி நல்லங்கமுடையதோர் கோலூன்றி நின்ற வழகும்,

3. முடிச்சோதியாயுனது முகச்சோதி மலர்ந்ததுவோ என்று கோவிந்தாபிஷேகத்தால் திருமுடியில் நல்தரித்த ஸ்வாமித்வ ப்ரகாசமாய் கதிராயிரமிரவி கலந்தெறித்தாலொத்த நீண்முடியும்,

4. "ஸவிலாஸ ஸ்மிதாதாரம் பிப்ராணம் முகபங்கஜம்" என்கிறபடியே முறுவலெடுத்த கலமென்றலாய் ஸ்வாமித்வபலோபதாந ஸௌசீல்ய ப்ரகாசகமான ஸ்மயமான முகாரவிந்தமும்,

5. அலர்ந்து குளிர்ந்திருக்கிற விரண்டு தாமரைப் பூக்களை மதத்தாலே அமுக்கியாடுகிற இரண்டு வண்டொழுங்கு போலிருக்கிற தன்கைச்சார்ங்க மதுவே போலழகிய திருப்புருவ வட்டங்களும்,

6. "பதிம்விச்வஸ்ய" என்கிற ப்ரமாணம் வேண்டாதே அனைத்துலகுமுடையபவரவிந்த லோசனனென்று ஸர்வேச்வரத்வ சிஹ்நமாய் மிதோபத்தஸ்பர்த்தஸ்ப்புரித ஸபரத்வக் த்வலலிதங்களான திருக்கண்களும்,

7. கஸ்தூரீ கலிதோர்த்வ புண்ட்ர திலகம்" என்று திருநெற்றியில் சாத்தின கஸ்தூரித் திருநாமமும்

8. "மாட்டுயர் கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ" என்று நித்ய ஸந்தேஹ ஜநகமான கோலநீள் கொடி மூக்கினழகும்,

9. அதினுடைய பல்லவோல்லாஸம் போலிருக்கிற திவ்ய கபோலங்களும்,

10. "அதினுடைய நவகுஸுமம் போலேயாய் பன்னிலா முத்தம் தவழ் கதிர் முறுவல் செய்து" என்கிறபடியே பூரண சந்திரன் முழுநிலாவைச் சொரிந்தாற்போல் திருமுகத்தினொளியை ப்ரவஹிக்கிற ஸ்மித விலாஸமும்,

11. "சிலாஜ்ஜடீ பூயதே" என்று அந்த ஸௌசீல்ய காஷ்டாபூத ஸௌலப்ய ப்ரகாசமாய் அலவலைமை தவிர்த்த அழகனென்றும் ஆதரம் பெருக வைத்த அழகனென்றும் குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழிலெழு கமலப் பூவழகரென்றும், அநுகூல ப்ரதிகூல விபாகமற ஆண் பெண் வாசியறுத்து மற்றொன்றினைக் காணாமல் கண்டவர் தம் மனம் வழங்க ஸகல மநுஜநயந விஷயதாங்கதமாய் மகமென்று தொட்டுக் காட்டின வெளுத்திளைத்த திருமேனியும்,

12. "அர்ச்சக பராதீநாகிலாத் மஸ்திதி:" என்று அர்ச்சக பாரதந்த்ரியத்தைத் தன்னையிட்டுப் பார்த்தஞ்சின வச்சமறத்திருக்கையில் ஜ்ஞாந சக்தி ப்ரகாசமோயெடுத்துப் பிடித்த திவ்யாயுதங்களும்,

13. அனைத்துலகுமுடைய வரவிந்தலோசன னென்று சேஷித்வ ஸூசகமாய் கரியயாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி ஆழ்வார்களளவும் நீண்டலையெறிந்த நெடு நோக்கினழகும்,

14. இத்தலையைத் தேற்றியன்றித் தரியாதவளவான பூர்த்திக்கு ப்ரகாசகமாய் மாசுச: வென்று கொண்டு வைத்தஞ்சலென்ற கையும்,

15. இரண்டட்டத்திலும் மரகத கிரியைக் கடைந்து மடுத்தாற்போல் 'திண்ணியவாய்' "அலம்புரிந்து" என்கிறபடியே தனக்கு உபய விபூதியும் வழங்கி திவ்யாஸ்த்ர புஞ்பிதங்களான கற்பகக் காவன நற்பல தோள்களும்,

16. பெரிய பிராட்டியாருக்குக் கோயில் கட்டணமாய் நித்யாநுபவம் பண்ணச்செய்தேயும் இறையுமகலகில்லேனென்று அவளைப் பிச்சேற்றக் கடவ்தாய், கோலமாமாமணியாரமும் முத்துத்தாமமும் ஸ்ரீகௌஸ்துபமுந் தொடக்கமான குருமாமணிப்பூண் குலாவித் திகழ்கிற திருமார்பினழகும்,

17. காளமேகத்தில் மின்னற் கொடி படர்ந்தாற்போல் திருமேனிக்கு பரபாக்ரஸாவஹமாய் அழகு வெள்ளத்துக்கு அணைகட்டினாற்போலிருக்கிற வெண்புரி நூலினழகும்,

18. ஸௌந்தர்ய ஸாகர மிட்டளப்பட்டுச் சுழித்தாற்போல் நெஞ்சையும் கண்ணையுஞ் சுழியாறு படுத்துகிற திருவுந்தியும்,

19. ஸந்த்யாராக ரஞ்சிதமான ஆகாசம் போலே திருமேனிக்குப் பரபாகரஸாவஹமாய்த் திருவரை பூத்தாற் போலிருக்கிற அந்திபோல் நிறத்தாடையும்,

20. ரம்பாஸ்தம்பாதி கம்பீரங்களான திருத்துடைகளும்,

21. அங்கராகம் ப்ரவஹிக்கும்போது இரண்டுகுமிழி நீரெழுந்தாற் போலிருக்கிற திருமுழந்தாள்களும்,

22. கள்ளச்சகடத்தைக் கலக்கழியச்சாடிக் கன்று மறித்தோடிக், காளியன் மீதாடிக் காளிந்தி நீராடிக், குரவை பிணைத்தாடிக், குடமேறிட்டாடிக், கருணையால் தூதோடிக், கன்னியரோடுடிக், கழகமிதித்தேறிச் சிற்றிலழித்தாடிச், சரணாகத் தந்தொழிந்த திண்கழலிருந்த அழகும்,

23. சீரியதோர் நிதிபோலே திருமுன்பே வீற்றிருந்த ஸ்ரீ சடகோபனிருந்த வழகும்,

1. இவ்வழகில் ஆழங்கால்பட்டு அலைகின்ற உலகெல்லாம் சூழ்ந்திருந்தேத்தும் அழகுமாய் நீராட எழுந்தருளியிருக்கும் அழகு இது ஏதேனும் சிந்தை மருளோ !
2. ஜகன் மோகன மந்த்ரப்ரபாவமோ!
3. ஸகலரஸகுளிகாவிலாஸமோ!
4. ஸர்வபோக சிந்தாமணி பிரகாசமோ!
5. ஸகல ஜநஸுக்ருத விபாகமோ!
6. நிகிலபலகல்பலதா ப்ரஸரமோ!
7. அகில ஜகஜ்ஜீவன மூலமோ!
8. அதுலாநந்தகந்தாவதாரமோ!
9. ஸமஸ்த ஸம்பத்ஸாம்ராஜ்ய வேஷமோ!
10. ஸர்வ மங்கள ஸந்தான ப்ரஸவமோ!
11. ஸகலகலா ரஹஸ்ய ஸர்வஸ்வமோ!
12. ஈதெல்லாம் திரண்டெழுந்து கொண்டதோர் வடிவோ!
13. இதுவுமன்றியில் அப்ரமேய தேஜஸ்ஸோ!
14. நாங்கள் ஏதென்றறியா இவ் வழகுடன் தேவரீர் ஊழிதோறும் ஊழிதோறும் வாழ்ந்திடுக வாழ்ந்திடுகவே: யதுஸார்வபௌமனே! திருமஞ்சனங் கண்டருளவே: ஜயவிஜயீபவ!

## ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி ஸஹஸ்ரதாரைத் திருமஞ்சனம்

நாயந்தே! நாயந்தே!

த்வம்மே அஹம்மே குதஸ்தத் ததபி தவகுதோ வேத மூலப்ரமாணாத்.

ஏதச்சாநாதி ஸித்தாதநுபவ விபவாத் தர்ஹி ஸாக்ரோச ஏவ|

க்வாக்ரோச: கஸ்ய கீதாதிஷு மமவிதித: கோத்ரஸாக்ஷீ ஸுதி: ஸ்யாத்

ஹந்த த்வத்பக்ஷபாதீஸ இதி ந்ருகலஹே

ம்ருக்ய மத்யஸ்த்தவத்தவம்.

ஸஇதாநீமபிமுநே த்ருச்யதே தத்ரமாநவை;

ருக்மிண்யாசா நிருத்தேந ப்ரத்யும்நேந ச ஸேவித;

ஹலாயுதே ந ஸஹிதஸ்ததா ஸாத்யகி நா ஸஹ

பார்த்தஸாரதி ரித்யேவ விஸ்ருதோ ஜகதிபதி:

பராக்-பராக்! ஸ்வாமீ! பராக்

1. அன்றிய வாணனையிரந்தோளுந் துணிய அன்றுழிவிடுத்த அசைவோ?
2. கன்றதனால் விளவெறிந்து கனியுதிர்த்து ஆநிரைமேய்த்த அசைவோ?
3. கும்பமிகுமதயானை மருப்பொசித்துக்கஞ்சன் குஞ்சிபிடித்தடித்த அசைவோ?
4. வம்பவிழும் மலர்க்குழலாளாய்ச்சிவைத்த தயிர்வெண்ணெய் உண்டுகந்த அசைவோ?
5. பாழியில் மிக்க பார்த்தனுக்கு அறுமூன்றும் அளித்துரைத்த அசைவோ?
6. ஆழியாலன்றங்கு ஆழியை மறைத்து ஐவர்க்குத் திறங்கள் காட்டியிட்ட அசைவோ?
7. அடியார்கள் வினைத்தொடரை அருளென்னும் ஒள்வாள் உருவி வெட்டிக்களைந்த அசைவோ?
8. வடிவாரும் மாமலராள் வலவருகும் மற்றை மண்மகள் இடவருகுமிருக்க நடுவாக வீற்றிருக்கும் இவ்வழகுடன் தேவரீர் ஊழிதோறும் ஊழிதோறும் வாழ்ந்திடுக வாழ்ந்திடுகவே: ஸ்ரீ பார்த்தஸாரதனே! திருமஞ்சனங் கண்டருளவே: ஜய விஜயீபவ!